## கலைஞர் கருணாநிதி அவர்களது சாதனைகள்

- முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி அவர்கள் 1957 ஆம் ஆண்டு முதன் முதலில் தேர்தலில் போட்டியிட்டு வென்றார்.
- மொத்தம் 13 முறை போட்டியிட்டு, போட்டியிட்ட தேர்தல்கள் அனைத்திலும் வெற்றிபெற்றார்.
- ஐந்து முறை முதலமைச்சராகப் பணியாற்றி, பார் போற்றும் வண்ணம், பல்வேறு சட்டங்களையும், திட்டங்களையும் தீட்டியவர்.
- சட்டமன்ற உறுப்பினராக, எதிர்க்கட்சித் துணைத்தலைவராக, எதிர்க்கட்சித் தலைவராக, மேலவை எதிர்க்கட்சித்தலைவராக, அமைச்சராக, முதலமைச்சராக என பல பொறுப்புகளை ஏற்று பரிமளித்தவர்.
- அண்ணா அவர்களது கொள்கையான கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றை அரசியலில் தனது கொள்கையாகக் கொண்டு சரித்திரம் படைத்தவர்.
- 1969 ஆம் ஆண்டு முதன்முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். 1971 முதல் 1976 வரை இரண்டாவது முறையாகவும், 1989–91–ல் மூன்றாவது முறையாகவும், 1996 முதல் 2001 வரை நான்காவது முறையாகவும், 2006 முதல் 2011 வரை ஐந்தாவது முறையாகவும் முதலமைச்சராகப் பணியாற்றியவர்.

### 1969 முதல் 1976 வரை ஆற்றிய சாதனைகள்

- மனிதனை மனிதனே மாடு போல இழுக்கும் அவலம் கண்டு, கை ரிக்ஷாக்களை 3,6.1973 முதல் ஒழித்து, இலவச சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்கினார்,
- போக்குவரத்துக் கழகங்களை உருவாக்கினார்.
- காவலர்களுக்கென 1969–ல் முதலாவது காவல் ஆணையத்தை உருவாக்கினார்.
- அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆக வகை செய்யும் வண்ணம் 2.12.1970 அன்று அர்ச்சகர் சட்டத்தை, சட்டப் பேரவையில் கொண்டு வந்து நிறைவேற்றினார்.
- அன்னைத் தமிழுக்கு அழகு சேர்க்க, அரசு விழாக்களிலும், கல்வி நிலையங்களின் விழாக்களின் தொடக்கத்திலும், மனோன்மணீயம் காப்பியத்திலிருந்து பெ.சுந்தரம் பிள்ளை எழுதிய "நீராருங்கடலுடுத்த" என

தொடங்கும் தமிழ்த்தாய் வாழ்த்தினைப் பாட வேண்டும் என்ற ஆணையை 1970 ஆம் ஆண்டு பிறப்பித்தார்.

- நிலத் சீர்திருத்த (உயரளவைக் குறைத்தல்) சட்டம் 1970 நிறைவேற்றப்பட்டு, 1961 ஆம் ஆண்டின் சட்டத்தில் 30 தர ஏக்கர்கள் என்று நிர்ணயிக்கப்பட்டிருந்த நில உச்சவரம்பு 15 தர ஏக்கர்களாகக் குறைக்கப்பட வகை செய்தார்.

- குடிசைகளில் வாழ்வோரின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த அவர்களுக்கென அடுக்குமாடி வீடுகள் கட்ட, முதன் முதலாக 1970 ஆம் ஆண்டு குடிசை மாற்று வாரியத்தினைத் தொடங்கினார்.

- குடிநீர் வடிகால் வாரியச் சட்டம், 1970 கொண்டுவரப்பட்டு, முன்னர் அரசுத் துறையால் செய்யப்பட்டு வந்த குடிநீர் வடிகால் சார்ந்த பணிகள் குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பெற்று, பணிகள் விரைவாக நடப்பதற்கு வழி வகுத்தது.

- பார்வையற்றவர்களுக்கு கண்ணாடிகள் வழங்கும் கண்ணொளித் திட்டம், பிச்சைக்காரர்களுக்கான மறுவாழ்வுத் திட்டம், விதவை மறுமணம், கலப்புத் திருமணம் ஆகியவற்றுக்கு நிதி உதவி ஆகிய முற்போக்கான திட்டங்களை முனைப்பாகச் செயல்படுத்தினார்.

- பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கென தனி அமைச்சகத்தினை உருவாக்கினார்.
- பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டினை 25 சதவிகிதத்திலிருந்து 31 சதவிகிதமாக உயர்த்தினார்.
- சேலம் உருக்காலை திட்டத்தினைக்கொண்டு வந்தார்.

- 1973 வரை இந்தியாவில் எந்த முதலமைச்சருக்கும் சுதந்திர தினத்தன்று கொடி ஏற்றும் உரிமை இல்லை. பிரதமர் இந்திரா காந்தி அவர்களிடம் தெரிவித்து, அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கும் அந்த உரிமையைப் பெற்றுத்தந்தவர் கலைஞர். அதன்படி, 15.8.1974 அன்று முதன்முதலாக கோட்டையில் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்து கொடியேற்றினார்.

## 1989 முதல் 1991 வரை ஆற்றிய சாதனைகள்

விவசாயிகளின் பாசனத்திற்கு இலவச மின்சாரம், ஒடுக்கப்பட்ட மக்களுக்கான 69 சத விகித இட ஒதுக்கீடு ஆகியவற்றைச் செயல்படுத்தினார்.

பெண்களுக்கு சமத்துவம் அளிக்கும் வகையில் இந்து குடும்பத்தில் பிறந்த **மகளிருக்கு சொத்தில் சம உரிமை வழங்கும் வகையில் இந்து வாரிசு உரிமை (தமிழ்நாடு திருத்த) சட்டம், 1989 இயற்றப்பட்டது.**

அரசுப் பணியிடங்களில் பெண்களுக்கு 30 சதவிகித இடஒதுக்கீடு, ஏழைப் பெண்களின் திருமண நிதி உதவிக்காக மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவி தொகைத் திட்டம் ஆகிய திட்டங்களை தீட்டி செயல்படுத்தினார்.

## 1991–1996 வரை ஆற்றிய சாதனைகள்

30.9.1996 அன்று மெட்ராஸ் என்பதை சென்னை என்று பெயர் மாற்றம் செய்தார்.

உழவர்கள் தாங்கள் விளைவித்த பொருட்களை சந்தைகளில் தாங்களே விற்கும் வண்ணம், உழவர் சந்தைகள் கொண்டு வந்தார்.

சாதிவாரியாக மக்கள் பிரிந்திருக்கும் மனஉணர்வினை நீக்கும் வண்ணம், தமிழகத்தில் 100–க்கும் மேற்பட்ட இடங்களில் சமத்துவபுரங்களை உருவாக்கினார்.

ஊரகப்பகுதிகளிலும் கிராமப்பகுதிகளிலும் உள்ள ஏழை எளிய மக்களின் வசதிக்காக கிராமப்புறங்களுக்குச் செல்லும் வண்ணம் சிற்றுந்துகளை முதன்முதலாக அறிமுகப்படுத்தினார்.

கிராமப்புற பள்ளி மாணவர்கள் கல்வி கற்றலை ஊக்குவிக்க, அவர்களது பொருளாதாரச் சுமையைக் குறைக்க, இலவச பஸ் பாஸ் திட்டத்தை செயல்படுத்தினார்.

தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறைக்காக ஒரு தனி அமைச்சகத்தை உருவாக்கி அந்தத் துறை 13-5-1996 முதல் செயல்பட்டு வருகின்றது.

அண்ணல் அம்பேத்கர் பெயரில் தமிழகத்தில் ஒரு சட்டப் பல்கலைக்கழகம் அமைய, டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 1996 கொண்டுவரப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

உயர் கல்வி நிலையங்களில் புதிதாகச் சேர்பவர்களை ஏற்கெனவே உள்ள மாணவர்கள் கேலி வதை என்ற பெயரால் அத்துமீறித் துன்புறுத்துவதைத் தடுக்கும் வகையில், கேலி வதை செய்தலைத் தடுத்தல் சட்டம், 1997 இயற்றப்பெற்றது. (14-2-1997).

**2006 முதல் 2011 வரை ஆற்றிய சாதனைகள்**

2006 ஆம் ஆண்டு மே 13 ஆம் நாள் ஐந்தாவது முறையாக ஆட்சிப்பொறுப்பேற்ற கலைஞர் அவர்கள், ஒரு கிலோ அரிசி 2 ரூபாய் திட்டத்தினைக் கொண்டு வந்தார்.

22,40,739 விவசாயிகள் பெற்றிருந்த 7000 கோடி ரூபாய் கூட்டுறவு கடனைத் தள்ளுபடி செய்தார்.

சத்துணவுத் திட்டத்தில் வாரம் இரண்டு முட்டைகள் வழங்கச் செய்தார்.

நியாயவிலைக் கடைகள் மூலம் ரேஷன் கார்டுதாரர்களுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தினைக் கொண்டு வந்தார்.,

கிராமப்புற மகளிர் சிரமங்களைப் போக்கும் வண்ணம் 29 இலட்சம் குடும்பங்களுக்கு இலவச எரிவாயு இணைப்புடன் கூடிய எரிவாயு அடுப்பு வழங்கிடச் செய்தார்.

காமராஜர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாள் என்று அறிவித்தார்.

அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகும் வகையில் சட்டம் நிறைவேற்றச் செய்தார்.

தமிழை செம்மொழியாக அறிவித்து 12.10.2004 அன்று அதற்கான மத்திய அரசின் ஆணையை பெற்றுத் தந்தார்.

சென்னையில், அண்ணா மேம்பாலம் அருகே செம்மொழிப்பூங்கா அமைத்தார்.

ஒன்றாம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை அனைத்து பள்ளிகளிலும் தமிழை ஒரு பாடமாகக் கட்டாயமாக பயிற்றுவிக்க வேண்டும் என்று ஒரு சட்டத்தினை 31.5.2006 அன்று சட்டப்பேரவையில் கொண்டு வந்து நிறைவேற்றினார்.

27.2.2009 அன்று அருந்ததியினருக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் இடஒதுக்கீடு அளித்து ஆணையிட்டார்.

2010 ஆம் ஆண்டு கோட்டூர்புரத்தில் 179 கோடி ரூபாய் செலவில் உலக தரத்திலான அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகம் அமைத்தார்.

கன்னியாகுமரியில் கடல் அலைகள் சூழ, 133 அடி உயரத்தில் 7000 டன் எடை கொண்ட விண் முட்டும் அய்யன் திருவள்ளுவர் சிலையை ரூ.9.65 கோடி செலவில் அமைத்து, திருவள்ளுவருக்கு பெருமை சேர்த்தவர் கலைஞர் அவர்கள்.

2010 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் நாள் முதலமைச்சர் கலைஞர் ஓர் ஆணை பிறப்பித்தார் . அந்த ஆணைப்படி , ஒரு குறிப்பிட்ட பணிக்கு தேவையான அடிப்படைக் கல்வித் தகுதியில் , தமிழ் வழியில் படித்தவர்களுக்கு 20 விழுக்காடு இடங்கள் ஒதுக்கப்பட்டன . அதன்படியே இன்று தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அரசுப் பணிக்குப் பணியாளர்களைத் தேர்வு செய்து வருகிறது.

**பொது**

அரசியலில் மட்டுமின்றி, சிறுகதை, புதினம், மடல், நாடகம், திரைப்படம், புதுக்கவிதை ஆகியவற்றைப் படைப்பதிலும் சிறந்து விளங்கினார். பொதுக்கூட்ட மேடை, இலக்கிய மேடை, கவியரங்கு, போன்ற அனைத்திலும் சிறந்த பேச்சாளராக, பல்துறை விற்பன்னராகத் திகழ்ந்தவர்.

75–க்கும் மேற்பட்ட திரைப்படங்களுக்கு திரைக்கதை, வசனம் எழுதியுள்ளார்.

"மாவட்டத்திற்கொரு மருத்துவக் கல்லூரி " கோட்பாட்டின்படி விழுப்புரம் , திருவாரூர், தருமபுரி, சிவகங்கை, பெரம்பலூர், திருவண்ணாமலை ஆகிய இடங்களில் 6 புதிய மருத்துவக் கல்லூரிகள் அமைய வழி வகுத்தார்.

அரசு பொறியியல் கல்லூரிகள் இல்லாத திண்டிவனம், விழுப்புரம், பண்ருட்டி, அரியலூர், திருக்குவளை, இராமநாதபுரம், திருவண்ணாமலை, தஞ்சாவூர், திண்டுக்கல், தூத்துக்குடி, கன்னியாகுமரி, காஞ்சிபுரம் உட்பட 12 மாவட்டங்களில் புதிதாக அரசு பொறியியல் கல்லூரிகள் அமைய வழி வகுத்தார்.